# தொண்டர் படைப் பாட்டு

## தெய்வீகத் தாய்நாடு

நாதந்தி னாதந்தி
நாதந்தி னாதந்தி
நாதந்தி னாதந்தி — தந்தி னாதந்தி
நாதந்தி னாதந்தினா.

கலை கற்ற தாய் செல்வ
நிலை பெற்ற தாய் காடு
மலை பெற்றதாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
புலையற்ற தெய் விகத்தாள்.

யோகத்தின் தாய் கொள்கை
வேகத்தின் தாய் செய்யும்
யாகத்தின் தாய் எங்கள்தாய்—எனிற்பாரதத்தாய்
ஏகத்தின் தெய் விகத்தாள்.

சாந்தத்தின் தாய் நல்ல
மாந்தர்க்குத் தாய் நீதி
வேந்தர்க்குத் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
வாய்ந்திட்ட தெய்விகத்தாள்.

அன்புக்குத் தாய் தோளின்
வன்புக்குத் தாய் வேண்டும்
இன்பத்தின் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
சம்பத்தின் தெய்விகத்தாள்.

வென்றிக்குத் தாய் கீதத்
தென்றற்குத் தாய் நீத
மன்றுக்குத் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
தன்னொத்த தெய்விகத்தாள்.

அமருக்குத் தாய் வெற்பின்
இமயத்தின் தாய் ஆறு
சமயத்தின் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
நமையீன்ற தெய்விகத்தாள்.

தீரர்க்குத் தாய் ஞான
வீரர்க்குத் தாய் கற்பின்
நாரியர் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
சீருள்ள தெய்விகத்தாள்.

நீதத்தின் தாய் தெய்வ
கீதத்தின் தாய் நாலு
வேதத்தின் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
போதங் கொள் தெய்விகத்தாள்.

நீதிக்குத் தாய் நாலு
சாதிக்குத் தாய் உண்மை
போதிக்குந் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
காதல் செய் தெய்விகத்தாள்.

சீதைக்குத் தாய் இவர்
மாதுக்குத் தாய் நல்அ
சோதைக்குத் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
நீ தங்கொள் தெய்விகத்தாள்

புத்தர்க்குத் தாய் தேர்ந்த
பத்தர்க்குத் தாய் கோடி
சித்தர்க்குத் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
வித்தகத் தெய்விகத்தாள்.

வங்கர்க்குத் தாய் சீனத்
சிங்கர்க்குத் தாய் வன்தெ
லுங்கர்க்குத் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
இங்குற்ற தெய்விகத்தாள்.

நாரதன் தாய் நற்ப
கீரதன் தாய் சோழ
சேரனின் தாய் எங்கள் தாய்
வீரங் கொள் தெய்விகத்தாள்.

கம்பற்குத் தாய் காளி
நம்பற்குத் தாய் மற்ற
சம்பத்தின் தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
இம்பர்க்குத் தெய்விகத்தாள்.

விசயற்குத் தாய் கண்ணன்
இசை பெற்ற தாய் கீதை
ரசமுற்ற தாய் எங்கள் தாய்—எனிற்பாரதத்தாய்
வசையற்ற தெய்விகத்தாள்.

அணி பெற்ற தாய் பொன்னின்
மணி பெற்ற தாய் அத்தன்
துணை பெற்ற தாம் எங்கள் தாய் — எனிற்பாரதத்தாய்
இணையற்ற தெய்விகத்தாள்.

### தொண்டரைச் சேர்த்தல்

(ஸ்ரீ குணங்குடி மஸ்தான் "போவோம் குணங்குடிக் கெல்லோரும் - புறப்படுங்கள்" என்று பாடிய மெட்டில் இதனைப் பாடித் தொண்டர்கள் - மற்றும் பாரதப் புத்திரர்களைத் தொண்டர் படையிற் சேரக் கேட்க வேண்டும்.)

பல்லவி

சேர்வீர் தொண்டர் படைக்கெல்லோரும் — அரை நொடியில் (சே)

அநுபல்லவி

பாரீர் நமக்கு வந்த கேடு! — பொறுக்கவில்லை
வாரீர் இதனை அடியோடு கல்ல எம்மோடு (சே)

சரணங்கள்

இன்பம் பொலிந்ததிரு நாட்டை — நவமணிகள்
ஈன்றார் குவித்து வைத்த வீட்டை — மறவர் குலம்
என்றும் மலிந்திருக்கும் காட்டை — இணையுலகில்
இல்லா விதம் கிடைத்த தேட்டைப் பிறர்தளைத்த
வன்மை விலங்க கலப்பூட்டை — யுடைத்துக்காட்டச் (சே)

கண்ணன் வழிப் பிறந்த சாதி ... நமக்கருந்த
கஞ்சியன்று வயிற்றிற் பாதி... பிணிவகைகள்
தண்ணி வருத்துவது மீதி — அடிமையென
நம்மைப் பிடித்திட்ட வியாதி — தொலைந்ததென்று
விண்ணும் அதிர் சங்கை யூதிப் — ''பராக்'' கென்றோதிச் (சே)

காளையருச்சுனனிறந்தான் — அறம்புரந்த
கண்ணன் நம்மைவிட்டுப்பறந்தான் — சிபியுமிந்த
வேளைதனி லின்றிமறைந்தான் — எனினும் அவர்
தோளே நமக்குமென்றறிந்தோம் — உடன்பிறந்தோம் (சே)

வாழ்வே மிகச் சிறிய நேரம் — இதற்கிடையில்
மானம் இழப்பதுவிகாரம் — உயிர் கொடுத்தும்
தாழ்வை யகற்றுவது வீரம் — நமதுரிமை
தாங்கி நடத்தல் சமுசாரம் — அரைவயிற்றுக்
கூழோடிறப்பது விசாரம் -- அதிக கோரம் (சே)

சாரைச் சிற்றெறும்பெனக் கூடிச் — சிங்கங்களென்னச்
சள்ளைக் கலிப்பகையைச் சாடி — இழந்த பழம்
பேரை நமது தலைசூடி — உடன்பிறந்தும்
பேதம் கொள்ளும்வரை — வாய்மையெனும்
போரை நடத்த இன்று கோடிக் — கணக்கிலோடிச் (சே)

## தமிழ் வீரரின் எழுச்சி

லல்லல லல்லல லால — லை
லல்லல லல்லல லால — லால

(என்ற வாய்ப்பாடு)

எங்கள் இளந்தமிழர் வீரர் — அவர்
இப்புவி வீழினும் வீரர்! வீரர்!
சிங்கப் படையினைப் போலப் — பகைத்
தீயை எதிர்த்திடும் வீரர் ஆவர்!
கங்கை தவழ்ந்திடு நாடு — தங்கள்
காதல் எலாமந்த நாட்டினோடு
தங்க வினத்தவர்க்காக — உயிர்
தன்னையு மீந்திடும் வீரர் ஆவர்.
(எங்கள் இளந்தமிழர் வீரர்

வெற்றி நிலைத்திட வேண்டும் — தங்கள்
வீர மெலாம்புவி ஏறவேண்டும்
சுற்றம் சுகப்பட வேண்டும் — நற்
சுதந்திர வாழ்வினிற் கூடவேண்டும்
மற்றிவை; வீரரின் உள்ளம் தனில்
மண்டிக் கிளர்வன; வாழி! வாழி
சற்றிதிர் சோர்பவர் அல்லர் — இதிற்
சாவடைத லொன்று வாழ்தல் ஒன்று!
(எங்கள் இளந்தமிழர் வீரர்)

சோழனென் றேஒரு வீரன் — இந்தத்
தொல்புவி காத்தவன் வீரன் — வீரன்!
வாழிய பாண்டிய வீரன்! — அவன்
வாய்மையி லேபெரும் வீரன் — வீரன்
ஊழிபெ யர்ந்துவந் தாலும் தங்கள்
ஊக்கங் கெடாக்குடி தோன்றினோர்கள்.
வாழ்க! தமிழ்க்குல வீரர் — அந்த
வன்மைத் தமிழ்க்குலம் வாழ்க! வாழ்க!
(எங்கள் இளந்தமிழர் வீரர்)